**விலைமனுக்கோரல் (IFB)**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**

# பத்தரமுல்லை, சுஹுருபாய கட்டிடத்தில் உள்ள "என்செலரி B" கட்டிடத்தின் தரை தளத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல்

# IFB No. PS/03/PB/PR/09/31/25

01. பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு சார்பாக தலைவர், அமைச்சி கொள்முதல் குவினால் பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய கட்டிடத்தில் நிறுவப்பட்ட அலுவலகங்களுக்கு ஊழியர்கள் மற்றும் சேவைகளை எதிர்பார்த்து வருகை தரும் பொதுமக்கள் சார்பாக "என்செலரி B" கட்டிடத்தின் தரை தளத்தின் உள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான "என்செலரி B" கட்டிடத்தின் தரைத்தளத்தின் பரப்பளவு 4065 சதுர அடியாகும். சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக 02 வருடகாலத்திற்கு கட்டிடம் குத்தகைக்கு வழங்கப்படுவதுடன் மேலும், அதற்கான மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களின் செல்லுபடியாகும் காலம் **2025.07.16 முதல் 2025.10.01 வரை** (மனுக்கள் திறக்கப்பட்ட நாளிலிருந்து 77 நாட்கள்) இருக்க வேண்டும்.

03. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து 02 ஆண்டுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கேற்ப மாறாமல் பராமரிக்கப்படல் வேண்டும்.

04. **2025.06.25 முதல் 2025.07.15 ஆந் திகதி வரை மு.ப.9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை** அலுவலக நாட்களில், திரும்பப் பெற முடியாத ரூ.250.00 தொகையை இந்த அமைச்சின் சிராப்பிடம் செலுத்தி மனு ஆவணத்தின் அசல் மற்றும் நகலினை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் பணமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

05. மனுவினை அசல் மற்றும் நகல் என இரண்டு பிரதிகளில் **2025.07.16** ஆம் திகதி **மு.ப.11.00** மணிக்கு முன் அமைச்சின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடல் வேண்டும் அல்லது மனு திறக்கும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்ப வேண்டும். மனு சமர்ப்பிக்கப்பட்ட உறையின் மேல் இடதுபக்க மூலையில் **"சுஹுருபாய கட்டிடத்தின் தரை தளத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல்"** எனக் குறிப்பிடப்பட வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தலைமை கணக்காளர்,
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு,
17வது மாடி,
"சுஹுருபாய",
பத்தரமுல்ல.

06. மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கோரல் முன்வைக்கும் நபர் அல்லது மனுதாரரின் பிரதிநிதியொருவருக்கு மனுத்திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க முடியும்.

07. தகுதியான அனைத்து மனுதாரர்களும் பொருட்களை வழங்குவதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். மனுதாரர் தனது நிறுவனத்தை வணிகமாக பதிவு செய்திருக்க வேண்டும், மேலும் உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் பெருமதி **ரூ.05 மில்லியனுக்கும்** அதிகமாயின் 1987 இலக்கம் 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் **(Public Contract Act)** பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட மனுவுடன் இந்த பதிவுச்சான்றிதழின் நகல் பிரதிகள் இணைக்கப்படாதவிடத்து மனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படும். மனுதாரரின் பெயர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது. மேலதிக விபரங்கள் மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

08. அனைத்து மனுக்களும், **ரூ.150,000.00** பெறுமதியான மனுப் பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மனுப் பிணையானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

   i. இலங்கையில் இயங்கும் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியால் வழங்கப்பட்ட பிணையாக இருத்தல் வேண்டும்.

   ii. மனுப்பிணைப் படிவம் மனு ஆவண தொகுப்பின் சேர்க்கப்பட்டுள்ள ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.

   iii. மனு பிணையானது செயளாலர்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு **"Secretary / Ministry of Public Security and Parliamentary Affairs"** எனும் பெயரில் இருத்தல் வேண்டும்.

   iv. மனுப்பிணை **2025.07.16** ஆம் திகதி முதல் **2025.10.29** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். (மனுக்கள் திறக்கப்படும் கால எல்லை **105 நாட்கள் வரை**)

09. தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர், சிற்றுண்டிச்சாலை செயற்படுத்தப்படும் காலத்தினை உள்ளடக்கிய அமைச்சின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி செயல்திறன் உத்தரவாதத்தை வழங்க கடமைப்பட்டிருக்க வேண்டும்.

10. **மனுதாரர் கொண்டிருக்கவேண்டிய தகைமை**

10.1 பின்வரும் நிறுவனங்கள் மனுகோரலுக்கான தகுதியை கொண்டுள்ளது.

(அ) வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்கள்
(ஆ) கூட்டாண்மை நிறுவனங்கள்
(இ) தனி உரிமையாளர்கள்

10.2 ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அமைச்சு பின்வரும் தனிநபர்கள்/நிறுவனங்களை கருத்தில் கொள்ளாது.

(அ) இதற்கு முன்னர் அமைச்சின் சிற்றுண்டிசாலை தொடர்பான வாடகைக் கொடுப்பனவுகளை செலுத்தத் தவறியவர்கள்.

(ஆ) அமைச்சிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கப்பட்ட சிற்றுண்டிசாலையை நடாத்துவதற்கு ஒப்பந்தங்களைச் செயல்படுத்தத் தவறியவர்கள்.

11. மனு ஆவணங்களை அமைச்சின் கணக்குப் பிரிவில் இலவசமாகப் பரிசோதிக்கலாம்.

12. இந்த விலைமனுக்கோரல் தொடர்பான மேலதிக தகவல்களை, கணக்குப் பிரிவின் தலைமை கணக்காளரிடமிருந்து, 011-2887697 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு**
**18 வது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல.**
**2025.06.25**